**செய்தி வெளியீடு எண்: 06/02/2021** **நாள்: 11.02.2021**

**பத்திரிக்கை செய்தி**

**வார நாட்களில் (திங்கள்கிழமை - சனிக்கிழமை) உச்ச நேரங்களில் இயக்கப்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் அதிகரிப்பு**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகளின் கோரிக்கையை கருத்தில் கொண்டு வார நாட்களில் (திங்கள்கிழமை - சனிக்கிழமை) உச்ச நேரங்களில் 7 நிமிட இடைவெளியில் இயக்கப்பட்டு வரும் மெட்ரோ இரயில் சேவைகளை 5 நிமிட இடைவெளியில் இயக்க முடிவு செய்துள்ளது.

எனவே, நாளை (12.02.2021) முதல் மெட்ரோ இரயில் சேவைகள் உச்ச நேரங்களில் (Peak Hours) காலை 8 மணி முதல் 10 மணி வரை மற்றும் மாலை 4 மணி முதல் 7 மணி வரை 5 நிமிட இடைவெளியிலும் மற்ற நேரங்களில் (Non-peak Hours) காலை 5:30 மணி முதல் காலை 8 மணி வரை, காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை மற்றும் இரவு 7 மணி முதல் 10 மணி வரை 10 நிமிட இடைவெளியிலும் மெட்ரோ இரயில்கள் இயக்கப்படும்.

சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் இரவு 10 மணி முதல் இரவு 11 மணி வரை 28 நிமிடங்களுக்கு பதிலாக 15 நிமிட இடைவெளியில் இயக்கப்படும்.

ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் மெட்ரோ இரயில் சேவைகள் நாள் முழுவதும் உச்ச மணி நேரம் (Non-peak Hours) இல்லாமல் 20 நிமிட இடைவெளியில் இயக்கப்படும்.

பயணிகள் அதற்கேற்ப தங்கள் பயணத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**